அப்படி இருக்கும்போது அந்தப் பகுதிக்கு அமைச்சராக இருந்தாலும் சரி, முதலமைச்சராக இருந்தாலும் சரி, அப்படி வருகின்றபோது சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது மக்களுடைய பிரதிநிதிகள் இவர்களை அந்த மேடையிலே ஏற்றுவதற்குக்கூட முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது என்று சொன்னால் இதற்கு தாங்கள் என்ன உத்தரவாதம் கொடுத்திருக்கிறீர்கள்? அது சம்பந்தமாக தங்களுடைய தீர்ப்பு என்னவென்பதை அறிய விரும்புகிறேன்.

(இ) சேலம் மாவட்டத்திலே உறுப்பினர்கள் தாக்கப்பட்டதாகச் சொல்லப்படுவது.

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களைப் பாதுகாப்பது என்பது தங்களுடைய தலையாய கடமை. கடந்த 20 ஆம் தேதி சேலம் மாவட்டத்திலே என்னுடைய கழகத்தினுடைய துணைப் பொதுச் செயலாளர், இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினர், இன்னொரு உறுப்பினர் டாக்டர் கே. பி. இராமலிங்கம் இரண்டு பேர்களும் சேலம் மாவட்டத்திலே சுற்றுப்பயணம் செய்கின்றபோது மகுடம் சாவடி என்ற இடத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் குறுக்கே மறித்து, அடித்து கொலை செய்கின்ற அளவுக்கு முயற்சி செய்திருக்கின்றார்கள். இது பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரியுமா? அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

(பதில் இல்லை.)

(ஈ) கன்னியாகுமரி மாவட்ட ஆலயப் பணியாளர்களின் ஊதிய உயர்வு கோரிக்கை.

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எ. சி. கண்ட்ரோலில் இருக்கின்ற இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத